தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - **2016**

**A011** காப்பிய இலக்கியம்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. இதிகாசம் என்ற சொல்லின் பொருள் என்ன?
2. சந்தேச காவியம் என்பது எவ்வகை இலக்கியமாகும்?
3. மணிமேகலையில் இடம் பெறும் தெய்வப் பாத்திரங்களைக் குறிப்பிடுக.
4. சீவகசிந்தாமணி எத்தனை இலம்பகங்களைக் கொண்டுள்ளது?
5. சூளாமணி என்பதற்கு நச்சினார்க்கினியர் தரும் பொருள் யாது?
6. நவரத்தினம் இழைத்த பொன்மீனைச் சிவனுக்குப் படைத்தவர் யார்?
7. மெய்ப்பொருள் நாயனாரின் பகைவன் யார்?
8. கம்பர் பிறந்த ஊர் எது?
9. சுந்தர காண்டம் எத்தனை படலங்களைக் கொண்டது?
10. ஹோமர் எழுதிய காப்பியங்களைக் குறிப்பிடுக.
11. தீன் விளக்கம் காப்பியத்தின் ஆசிரியர் யார்?
12. தமிழில் காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்த நூல் எது?
13. பூங்கொடிக் காப்பியத்தின் ஆசிரியர் யார்?
14. ஏனியட் காப்பியத்தின் அடிப்படைக் கருத்துக்களைக் குறிப்பிடுக.
15. கவிஞர் தமிழ் ஒளியின் இயற்பெயர் யாது?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

1. ஐஞ்சிறுங்காப்பியங்களை எழுதுக.
2. சீவகசிந்தாமணியில் பின்னோக்கு உத்தி பற்றிக் குறிப்பிடுக.
3. வளையாபதியின் இலக்கிய நயத்தினைச் சான்றுடன் கூறுக.
4. பரவை என்ற சொல்லின் பொருள்களைப் பட்டியலிடுக.
5. கம்பரின் மருத நில வருணனையைக் குறிப்பிடுக.
6. இரட்சணிய யாத்திரிகம் சிறுகுறிப்பு வரைக.
7. குத்பு நாயகம் காப்பியத்தின் பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.
8. பாரத சக்தி மகா காவியம் எத்தனைக் காண்டங்களைக் கொண்டது? அவை யாவை?

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகளைச் சான்றுடன் நிறுவுக.

(அல்லது)

(ஆ) பெரியபுராணத்தின் காப்பிய இலக்கணத்தை விளக்குக.

2. (அ) தமிழ் இலக்கியத்தில் இராமாயணம் பெறும் இடத்தினைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) இரட்சணிய யாத்திரிகத்தின் கதைமாந்தர்கள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) தேம்பாவணி காப்பியத்தின் இலக்கியத் திறனை விளக்குக.

(அல்லது)

(ஆ) குறுங்காப்பியங்களில் இடம்பெறும் பெண்ணியக் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

***